உறுப்பினர்களின் பார்வைக்காக, சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்பதையும், இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் தங்கள் அனுமதியோடு பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

2019 பிப்ரவரி 13]

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பது முதல் ஐம்பத்து ஆறு வரையிலான 17 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு பேருவகையோடு அளிக்கிறேன்.*

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு கொறடா திரு. சு. ராஜேந்திரன், மனுக்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்குவதாக விதி 110-ன்கீழ் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, எனது அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்று முதல் ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12-05

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி, உழவர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு, விவசாயிகள் மற்றும் அனைவருக்கும் பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வழங்கியும், இந்தியாவே வியக்கின்ற அளவிற்கு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் புதிய ஒப்பந்தங்களை உருவாக்கி, 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்தும், பேரவை விதி 110-ன்கீழ், தமிழக வரலாற்றில் முதன்முறையாக*